REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 5உ புதன் (20—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 6உ வியாழன் (21—11—57) [இதழ் 136

அணுவின் உட்கருவைத் தாக்க புதிய இயந்திரம் அமைக்க முயற்சி

அணுவின் உட்கருவைத் தாக்கி, அதன் உள்ளிருக்கும் நுண் சிதைவுகளையும், அவற்றைப் பிணித்துள்ள சக்திகளையும் ஆராய்வதற்குத் துணைசெய்யும் புதிய இயந்திரம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் இரண்டு அமெரிக்க ஆராய்ச்சி நிலையங்கள் ஈடுபட்டுள்ளன. அந்த இயந்திரம் 600 கோடி எலக்டிரான் வோல்ட் சக்தி கொண்டதாக இருக்கும்.

'உண்மை எனும் தங்கரேகை நோக்கியே தி. மு. கழகம் செல்கிறது'

'சரியெனப்பட்டதை துணிவுடன் உரைப்போம்'

'நாங்கள் 50 பேர் இருந்திருந்தால் அடக்குமுறைச் சட்டம் வந்திருக்குமா?

சென்னை--நுங்கம்பாக்கத்தில் அண்ணா விளக்கம்

கடந்த 17—11—57 மாலை சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற சமூக ஊழியர் மன்ற மூன்றாவது ஆண்டுவிழாப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"இந்தத்தடவை, நாட்டு மக்களின் கவனத்தை இழுக்கக்கூடிய பிரச்சினை சட்டசபையில் பேசப்பட்டது; அதுபற்றி என்ன முடிவு செய்யப்பட்டது—என் அந்தப் பிரச்சினை வந்தது என்பது பற்றியெல்லாம் அறிந்துகொள்ள மக்கள் ஆவல்படவில்லை; 'இந்த மசோதாபற்றி தி. மு. கழகத்தின் நிலை என்ன ?'—என்பதைத்தான் நல்லவர்களும் பொல்லாதவர்களும், நண்பர்களும் பகைவர்களும், மாற்றாரும் மற்றவர்களும் எதிர்பார்த்தார்கள். 'இப்படி நடந்துவிட்டதே' என்று ஆச்சரியத்துடன் நண்பர்களும், 'ஆகா, இதிலாவது மாட்டுவார்கள் என்று எதிர்பார்த்தோம்; ஏமாற்றிவிட்டார்களே' என்று மாற்றாரும் இன்றையத்தினம் எண்ணுகிறார்கள்.

"சட்டசபையில் நடைபெற்ற கடைசி விவாதத்தில் நான் பேசிய பிறகு, பெரிய காங்கிரஸ் தலைவர் ஒருவர் என்னிடம்வந்து, 'நீங்கள் எவ்வளவுதான் பெரியாரை ஆதரித்துப் பேசினாலும், அவர் மறுபடியும் உங்களைத் திட்டிக்கொண்டுதான் இருக்கப்போகிறார்' என்று சொன்னார். அவருக்கும் திராவிடர் கழக நண்பர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வதெல்லாம் இதுதான்—நாங்கள் எடுக்கும் முடிவுபற்றிப் பெரியார் என்ன கருதுவார் என்று மனதில் கொண்டு நாங்கள் முடிவெடுக்கவில்லை. பெரியார், இதைக்கூட, 'அண்ணாதுரையின் நயவஞ்சகம்' என்று சொன்னாலும் சொல்லக்கூடியவர்; அந்த அளவுக்கு அவர் உடலில் விஷம் ஏற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். அவர் அப்படிக் கருதினாலும் சரி—வேறு எப்படிக் கருதினாலும்

(4-ம் பக்கம் பார்க்க)

உணவுத் தானியங்கள் கள்ளக் கடத்தல்

'அதிகமான அளவு இல்லை' என்கிறார் டெல்லி மந்திரி

இறக்குமதியின் அளவு அடுத்த ஆண்டு நிர்ணயமாகுமாம்

புதுடில்லி, நவ. 19—

உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யவேண்டிய அளவு எவ்வளவு என்பதை சனவரிக்குப் பிறகு, மகசூல் நிலைகளை அறிந்துகொண்டு நிர்ணயிக்க வேண்டும் என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்!

நவ. 3-ந் தேதியன்று கணக்குப்படி, சர்க்காரிடம், 5,53,400 டன் கோதுமை 'ஸ்டாக்' இருப்பதாகவும் உணவு மந்திரி அஜீத்பிரசாத் ஜெயின் மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"ரிசர்வ் 'ஸ்டாக்' இருந்தபோதிலும், இறக்குமதி செய்ய வேண்டியது அதிகமாயிருக்கும்."

என்றும் அவர் கூறியுள்ளார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், உதவி மந்திரி ஏ. எம். தாமஸ், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான், இலங்கை நாடுகளுக்கு, உணவுப் பொருள்கள் ஒன்றும் அதிகமான அளவில் கள்ளத்தனமாகக் கடத்தப்படவில்லை என்று கூறியிருக்கிறார்.

கோதுமை, உப்புமாவை பிரபலப்படுத்த வேண்டுமாம்

கலப்பு உணவு, ஊட்டம்மிக்கதாம்!

அரிசிதர கையாலாகாத மந்திரியின் உபதேசம்

சென்னை, நவ. 19—

அரிசி உணவு மட்டும் சாப்பிடும் பழக்கத்தைத் தமிழ் மக்கள் மாற்றிக்கொள்ள வேண்டுமாம்!

மக்களுக்குத் தேவையான அளவு அரிசிதர முடியாதிருக்கும் மாநில உணவு மந்திரியாயிருக்கும் பக்தவத்சலம் இவ்வாறு உபதேசித்திருக்கிறார்!

கோதுமையும் அரிசியும் கலந்த கலப்பு உணவுப் பழக்கத்தை மக்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமாம்!

அரிசி பற்றாக்குறையைச் சமாளிக்க மட்டுமின்றி, ஊட்டம்தரும் உணவு என்ற நோக்கின்படி பார்த்தாலும், கோதுமையைச் சாப்பிட மக்கள் பழகிக்கொள்ள வேண்டுமென்கிறார், அவர்!

கலப்பு உணவு, சிக்கனமாகவும் கிடைக்கமுடியுமாம்!

நியாயவிலைக் கடைகளில் அரிசியையும், கோதுமையையும், சரி அளவுதர உத்தேசித்திருக்கிறார்களாம்!

மாநில உணவுக் கவுன்சில் கூட்டத்தில் பேசிய அவர், 'மக்களுக்கு கோதுமையினால் உணவுப் பண்டங்களை எவ்வளவு சுலபமாகத் தயாரிக்கமுடியும் என்பதைக் கற்றுத்தரவேண்டும்' என்றும் கூறினாராம்!

உப்புமா!

கோதுமை உப்புமாவை மக்களிடத்தில் பிரபலப்படுத்தவேண்டும் என்றும், மாதிரி உணவு நிலையங்கள் நடத்துவோர், கோதுமைப் பண்டங்களை மக்களுக்குப் பிரபலப்படுத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டாராம்!

'அரிசி உண்போர் தலையில் கோதுமையைக் கட்டாயமாகச் சுமத்தவேண்டும்'

அசோக மேதா குழுவின் சிபாரிசுகள்

புதுடில்லி, நவ. 19—

அசோகமேதா தலைமையில் நியமிக்கப்பட்ட உணவுத்தானிய விசாரணைக் குழு தனது அறிக்கையில், அரிசி உண்பவர்கள் தலையில் கோதுமையையும் கட்டாயமாகத் திணிக்கவேண்டும் என்று செய்துள்ள சிபாரிசு முக்கியமானதாகும்.

குழுவின் சிபாரிசுகள் டெல்லி சர்க்காரிடம் தரப்பட்டுள்ளன.

"உணவுப் பிரச்சினைக்குப் பரிகாரம், முழுச் சுதந்தரமான வர்த்தகத்திற்கும், முழுக் கட்டுப்பாட்டிற்குமிடையே தான் இருக்கமுடியும்"

என்று குழு கருத்தறிவித்திருக்கிறது.

"கட்டுப்பாடே இல்லாமலிருக்கவும் கூடாது—முழுக் கட்டுப்பாடும் கூடாது"

என்றும் குழுவின் அறிக்கை கூறுகிறது.

"இப்போதைக்கு, சர்க்கார், வெளி மார்க்கெட்டுகளில் அரிசியை வாங்கி தாங்களே விற்பதே போதுமானது"

என்றும் குழுவினர் கூறியுள்ளனர்.

சிபாரிசுகளில் முக்கியமானவை :—

1. உணவுதானிய மொத்த வியாபாரத்தின் ஒரு பகுதியை தேசியமயமாக்கவேண்டும்.
2. இதர வியாபாரிகளை, லைசென்ஸ் வழங்கும்முறை மூலம் கட்டுப்படுத்த வேண்டும்.
3. கணிசமான அளவு கோதுமை அரிசி ஸ்டாக் செய்ய வேண்டும்.
4. குறிப்பிட்ட அளவு அரிசியை முறையாக—தவறாமல் இறக்குமதி செய்துகொண்டிருக்க வேண்டும்.
5. இதர உணவுப்பொருள்களின் உபயோகம், உற்பத்தி இவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

இவைதான் இதர முக்கிய சிபாரிசுகள்.

விலையேற்றம்

வளரும் பொருளாதாரச் சூழ்நிலையில் விலை ஏற்றப் போக்கு இருக்கத்தான் செய்யும். எனவே உணவுப் பொருள்களின் விலையை ஸ்திரப்படுத்துவதற்கு, அவற்றுடன் சம்பந்தப்பட்ட இதர பொருள்களின் விலையையும் முடிந்தவரை கட்டுப்படுத்துவது தான் என்றும், ஆனால் விலை அமைப்பை, பல பொருள்களுக்குமாக இணைப்பது என்பது சாத்தியமும் இல்லை—விரும்பத்தக்கதும் இல்லை என்றும், குழு தெரிவித்துள்ளது.

விலை ஏறும் காலகட்டத்தில், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவாக ஏராளமான உணவுப்பொருள்களை இறக்குமதி செய்வதும் அவசியமாகும் என்றும், அவற்றுடன், உணவுப் பொருள்களை சர்க்காரே நேரடியாக ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்க வேண்டும்—உணவுப் பொருள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த மண்டலங்கள் அமைக்க வேண்டும்—உபரியாகக் கிடைக்கும் இடங்களில் குறிப்பிட்ட அளவு கட்டாயக் கொள்முதல் வேண்டும் — கொள்முதல் செய்யப்படுகிற பொருள் விலையை சர்க்கார் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்—

உணவு நிலைமை பொதுவாக சீர்கேடுறும்போது கல்கத்தா பம்பாய், சென்னை முதலிய பெரும் நகரங்களுக்கு, பாதுகாப்புத்தர வேண்டும்—என்றும் குழு கூறியிருக்கிறது.

'விலை ஸ்திர நிர்ணய போர்டு' என்ற பெயரில் ஒரு உயர் அதிகாரம் படைத்த குழு நியமிக்கவேண்டும் என்றும், இந்தக் குழு பொதுவாக உணவுப் பொருள்களின் விலையை ஸ்திரப்படுத்தும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்ளும் என்றும் குழு யோசனை கூறியுள்ளது.

பல மாநிலங்களும் எதிர்க்கின்றனவாம்!

என்றாலும் திட்டத்தைத் திணிப்பார்களாம்!

புதுடில்லி, நவ. 9—

உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்வதையும், உரம் விநியோகிப்பதையும் இணைக்கிற திட்டம் ஒன்றினை, பல மாநிலங்களும் எதிர்க்கின்றன என்றும், என்றாலும் சர்க்கார். நிதி இலாகாவின் ஆலோசனையுடன் திட்டத்தைத் துரிதமாகத் தயாரித்து வருகிறது என்றும் உதவி உணவு மந்திரி ஏ. எம். தாமஸ், மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

10,00,000 பேர் வேலை நிறுத்தம்

விலைவாசிகள் உயர்வின் எதிரொலி

பாரீஸ், நவ. 20—

பிரெஞ்சு நாட்டில் மக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

விலைவாசிகள், விஷம்போல் உயர்ந்துவிட்டன.

வாழ்க்கையை நடத்துவதற்கு மக்கள் திண்டாடுகின்றனர்.

எனவே தங்கள் குறைகளை எடுத்துரைக்க இன்று நாடெங்கும் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10,00,000 பேர் இன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—11—57 புதன்

அநியாயம்!

தமிழகத்தின் தேவைகளை டெல்லிப் பெரியவர்களுக்கு உணர்த்தி, அவர்களிடமிருந்து நியாயம் பெறுவதற்கு நெஞ்சுரம் இல்லாவிட்டாலும் சென்னை சர்க்காருக்கு, தங்களின் கையாலாகாத்தனத்தால் தமிழ் மக்களைக் கொடுமைப் படுத்துவதற்கு மட்டும் நெஞ்சழுத்தம் மிக இருக்கிறது என்றே சொல்லவேண்டும். இல்லாவிட்டால், ஏற்கனவே நியாயவிலைக் கடைகளில் தரப்படும் அரிசியின் அளவு போதுமானதில்லை என்ற கண்டனம் வலுத்திருந்தும், அந்த அளவைப் பாதியாகக் குறைக்க முன்வந்திருப்பார்களா?

நபர் ஒன்றுக்குத் தரப்படுகிற அரிசி இரண்டு படியாயிருந்தது; அதுவே கூட போதுமானதாயில்லை; மக்கள் அவதிப்பட்டு வந்தனர். இப்போது அந்த அளவையும் ஒரு படியாகக் குறைத்துவிட உத்தரவு.

இதற்குக் காரணமாக சர்க்கார் தெரிவித்திருப்பது, கடைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கப்போகிறோம் என்பதாகும்.

தமிழ் மக்கள், 'நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கையும் போதுமானதாயில்லை; அங்கு தரப்படுகிற அரிசியும் தேவைக்கு ஒப்ப இல்லை' என்றுதான் கூக்குரலிட்டு வந்தனர்.

ஆனால், 'கடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கிறோம்' என்ற பெயரில்,தரப்படும் அரிசியின் அளவைக் குறைப்பது என்ன நியாயம்?

'நியாயவிலைக் கடைகளும் அதிகமாக வேண்டும்; அரிசியும் தாராளமாகக் கிடைக்க வேண்டும்' என்பது கோரிக்கை; சர்க்கார் செய்வதோ, கடைகளை மட்டும் அதிகரித்து, அரிசியின் அளவைக் குறைக்கிறார்கள்.

எங்களுக்கு டெல்லி எசமானர்கள் மிக்க கருணை காட்டி, மாதம் 4,000 டன் அரிசி தரச் சம்மதித்திருக்கிறார்கள்; இதைக் கூடத் தரமுடியாது என்றுதான் அவர்கள் — எங்கள் மீதுள்ள அன்பினால்—கூறினர்; நாங்கள் சண்டையிட்டுப்பெற்ற வெற்றி இது; எனவே, இதற்குள்தான், நமது தேவைகளை அடக்கிக் கொண்டாகவேண்டும் —என்று இந்த மாநில சர்க்கார் வாதிடக்கூடும். இந்த நிலை, இந்த மாநில சர்க்காருக்கு ஏற்பட்டிருப்பது எதனால் என்பதையும், உணவுப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட விரும்புகிறவர்கள் சிந்தித்தாக வேண்டும்.

இந்த ஒரு படி அரிசி கிடைப்பதற்குக்கூட கோதுமையையும் வாங்கித்தீர வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை மறைமுகமாக சர்க்கார் விதித்திருக்கின்றனர்.

'கோதுமையை வாங்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை' என்று சர்க்கார் சொன்ன போதிலும், நியாய விலைக் கடைக்காரர்கள், 'கோதுமையை கட்டாயம் வாங்கியாக வேண்டும்' என்று உத்தரவிட்டுள்ளனர்.

வாங்குகிற கோதுமையை நியாய விலைக்கடைக்காரர்கள் எப்படி விற்கமுடியும்? அரிசி வாங்குகிற மக்களைத்தான் அவர்கள் கட்டாயப்படுத்துவர்— 'கோதுமை வாங்கினால்தான் அரிசி கிடைக்கும்' என்ற நிபந்தனை விதிப்பர். 'இது கட்டாயமில்லை' என்று மக்களிடத்தில் கூறிவிட்டு, மறைமுகமாக அவர்கள் தலையில் கோதுமையைச் சுமத்தும் சூழ்ச்சி என்பதைத் தவிர, வேறு என்ன? இதனை, அநியாயத்திலும் அநியாயம் என்று கூறுவதில் தப்பு என்ன?

கோதுமை மட்டும் தாராளமாகக் கிடைக்கிறது என்றால் எப்படி?

கோதுமை மட்டும் தேவையான அளவு இந்தியாவில் விளைந்துவிடுகிறதா என்றால், இதே சர்க்கார், 'இல்லை' என்கிறது.

கோதுமையும், அமெரிக்கா, கனடா, ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகக் கூறுகின்றனர்.

பின், கோதுமையை இறக்குமதி செய்கிற சர்க்கார், ஏன் அரிசியையும் போதுமான அளவு இறக்குமதி செய்யக் கூடாது என்ற கேள்விக்குப் பதில் இல்லை. இறக்குமதி செய்த கோதுமையை, பழக்கமில்லாத மக்கள்மீது திணிப்பானேன்?

வடநாட்டவர் கோதுமை உண்பவர்கள்; அவர்களுக்குத் தேவையான கோதுமை பற்றாக்குறையாயிருக்கிறது என்றால், அவர்களுக்கு யாரும், 'அதைவிட மலிவான மக்காச்சோளம் சாப்பிடுங்கள்' என்று உபதேசம் செய்யவில்லை; 'பருத்திக்கொட்டையைப் பரீட்சித்துப் பாருங்கள்' என்று அவர்களை எவரும் கேட்கவில்லை. கோதுமை, இறக்குமதி செய்யப்பட்டுத் தரப்படுகிறது.

ஆனால், தென்னாட்டவர் மட்டும் அரிசி பற்றாக்குறையால் கஷ்டப்பட்டால், 'உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ளுங்கள்' என்ற உபதேசமும், 'கோதுமையைச் சாப்பிடுங்கள்' என்ற கட்டாயமும், 'பருத்திக் கொட்டை வேண்டுமா?' என்ற கேலியும் பிறக்கிறது; ஏன்?

இறக்குமதி என்றால், அன்னியச் செலாவணிக் கஷ்டம் என்கிறார்கள். கோதுமை இறக்குமதிக்கு மட்டும் அந்தக் கஷ்டம் குறுக்கே வராத காரணம் என்ன? அரிசி இறக்குமதிக்கு மட்டும் அதனைச் சாக்காகக் காட்டுவானேன்?

இதை எல்லாம் கேட்கவேண்டிய இந்த மாநில சர்க்காரோ, டெல்லி சொல்லுவதற்கெல்லாம், 'தங்கள் சித்தம்—எங்கள் பாக்கியம்' என்று கூறி, தங்களின் எஜமான விசுவாசத்தை உறுதி செய்வதிலேயே கவனம் செலுத்துகிறார்கள்; தமிழ் மக்களை அநியாயமாகக் கொடுமைப்படுத்துகிறார்கள்.

தமிழ் மக்கள்—தென்னாட்டவர், தங்களின் பாரம்பரிய உணவுப் பழக்கங்களை மாற்றிக் கொள்வதற்கு இல்லை என்பதை விற்பனையாகாமல் மக்கிப் போய்க் கிடக்கும் கோதுமை சொல்லும்.

சென்னை சர்க்காரின் கையாலாகாத்தனத்தையும், அதனால் அவர்கள் மக்களுக்கு இழைக்கும் கொடுமைகளையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எண்ணற்ற நியாய விலைக் கடைகளைத் திறந்து, அவற்றிற்கு தாராளமாக அரிசி வழங்குவதின் மூலம்தான், அரிசி விலை ஏற்றத்தினை ஒரு இடத்திலாவது தடுத்து நிறுத்த முடியும் என்பதை, மீண்டும் சென்னை சர்க்காருக்கு வற்புறுத்தி உணர்த்த விரும்புகிறோம்.

மேலும் விலை ஏறுவதைத் தடுக்க!

10 இலட்சம் டன் அரிசி தேவையாம்!

அரிசி விலை மேலும் ஏறிவிடாமல் தடுக்க வேண்டுமானால், இந்தியாவிற்கு இன்னும் 10 இலட்சம டன் அரிசி தேவைப்படுமாம்.

இதற்காக இந்திய சர்க்கார், சீனா, பர்மா, வியட்நாம் நாடுகளுடன் அரிசி கேட்டு பேரம் பேசி வருவதாகத் தெரியவருகிறது.

சீனா, தனது வடக்கு மாகாணங்களில் விளையும் அரிசியில், ஒரு கணிசமான அளவு தரவும் சம்மதித்திருக்கிறதாம்.

இதுபற்றியும் சர்க்கார் பேச்சவார்த்தை நடத்திவருகிறதாம்.

வெடி விபத்துக்கள்

பற்றிய விசாரணை முடிவுகள்

"வர்த்தக நிறுவனங்கள் அதிக வெடிசக்தி மருந்துகள் கொண்ட வெடிகளைத் தயாரித்ததே வெடி விபத்திற்குக் காரணம்" என்று, விசாரணை நடத்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

'கேப்' தயாரிப்புக்கு லைசென்ஸ் முறை அமுலாக்குவதன்மூலமும், வெடிமருந்து உற்பத்திசாலைகளுக்குக் கண்காணிப்பு வைப்பதின் மூலமும் வெடி விபத்துக்களைத் தடுக்கலாம் என்று, விசாரணை நடத்தியவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

இலவச மருத்துவ உதவிக்குஉரியவர்கள்

ஒரு விளக்கம்

சென்னை, நவ. 18—

என். ஜி. ஓ.-க்கள், மற்றும் இலவச மருத்துவ உதவிக்குத் தகுதியானவர்கள் விஷயத்தில் அரசாங்க மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்ட வர்களைக் கவனிப்பதற்காக அங்கு உடன் தங்குவோருக்கு உணவுக் கட்டணம், இதர கட்டணங்களில் விலக்களிப்பது குறித்து அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

சம்பந்தப்பட்ட நோயாளி பச்சைக் குழந்தையாக இருந்து அல்லது மிக அபாயகரமானதாக இருந்து, கவனிப்பவர்கள் தங்கள் உணவுக்கு ஏற்பாடு செய்து கொள்ள முடியாமல் இருந்தால் அவர்களுக்கு உணவுக் கட்டணத்திலிருந்தும் விலக்கு உண்டு. ஆனால் பொதுப்படையாக, நோயாளிகளை கவனிப்பவர்களின் தங்குமிட கட்டண விஷயத்தில் தான் விலக்கு உண்டு.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

1957 நவம்பர் 2-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு 6 புள்ளி உயர்ந்து 383 ஆகியது; அரிசி, ராகி, காய்கறி, மிளகாய் ஆகியவற்றின் விலை உயர்வே இதற்குக் காரணமாகும்.

'டெல்லியிடமா அதிக வசதி?'

'தப்புக் கணக்குப் போடாதீர்' என்கிறார் பண்டித பந்த்

டில்லி, நவ. 19—

"மத்திய அரசாங்கத்திடம் உள்ள வசதிகள் அதிகம் என்று எண்ண வேண்டாம். அதிக நோட்டுகள் அச்சடிக்க நேரிட்டால் ரூபாயின் மதிப்புதான் குறையும்.மாநிலங்களுக்குஅதிக பணம் கொடுத்தாலும் பணத்தின் மதிப்பு குறைந்துவிடும். மாநிலங்கள் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு பணம் தரவேண்டும்—தேவைக்கு ஏற்றவாறு பணம் பெறவேண்டும்"

என்று மத்திய உள்நாட்டமைச்சர் பண்டித பந்த், மாநில நிதி அமைச்சர்கள் மாநாட்டில் கூறியிருப்பது, மாநிலங்கள் டில்லியை நிதி உதவிக்கு அதிகம் நம்பக் கூடாது என்ற நிலையிலும், மாநிலங்கள் முழு அளவில் டெல்லிக்குப் பணம் செலுத்த வேண்டும் என்பதாகவும் அமைந்துள்ளது.

குரங்குகள் ஏற்றுமதி

தடை செய்ய வற்புறுத்தல்

புதுடில்லி, நவ. 19—

இந்தியாவிலிருந்து குரங்குகளை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று இங்கு கூடிய உலக புலால் உண்ணாதோர் மாநாடு மீண்டும் வலியுறுத்தியது.

குரங்குகளை ஏற்றுமதி செய்யும் இழிசெயலைத் தடை செய்வதன் மூலம் கொடிய துன்பத்திலிருந்து குரங்குகளுக்கு விடுதலையளிக்க வேண்டுமென்று மாநாடு கேட்டுக் கொண்டுள்ளது.

பிச்சைக்காரர் விடுதிகள் அமைக்க முன்வந்தால்!

மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உதவி தருமாம்!

புதுடில்லி, நவ. 19—

"நாட்டிலுள்ள பிச்சைக்காரர்களுக்கென மாநில அரசுகள் விடுதிகள் அமைக்க முன்வந்தால், மத்திய அரசு, தேவைப்படும் பணத்தில் 50 சதவிகிதம் உதவியளிக்கும்" என்று மத்திய உள்நாட்டிலாகா அமைச்சர் தத்தார், மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

கேரளத்தில் கைத்தொழில்கள் துவங்குவது நிச்சயமாம்

வடநாட்டுத் தொழிலதிபர் பிர்லா உறுதிப்படுத்துகிறார்

பம்பாய், நவ. 19—

கேரளத்தில் சிலகைத்தொழில்களை ஆரம்பிப்பது பற்றி வடநாட்டு அதிபர் பிர்லா நிருபர்களிடம் பேசுகையில், தான், கேரளத்தில் சில கைத்தொழில்கள் துவக்க எண்ணியுள்ளதாகவும், கேரள முதலமைச்சர் இது பற்றி இந்திய வர்த்தக இலாகா அமைச்சர் தேசாயுடன் கலந்து பேசியுள்ளார் என்றும் கூறியுள்ளார்.

'நாகர் போராட்டம் அந்நியர் தூண்டுதல் அல்ல'

பண்டிதரே ஒப்புகிறார்

புதுடில்லி, நவ. 19—

"தனி நாடு ஏற்படுத்தும்படி கோரி நாகர்கள் நடத்திவரும் போராட்டம் அந்நியர் தூண்டுதல் என்று கூறுவது தவறாகும்"

என்று பண்டித நேரு மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

சுங்க வரியை டெல்லி வசூலிக்கும்

மாநிலங்கள் வரியை ரத்து செய்யும்

புதுடில்லி, நவ. 19—

இப்போது மாநிலங்கள் துணி, சர்க்கரை, புகையிலைமீது விற்பனை வரி விதித்து வசூலித்துவருகின்றன.

அடுத்த நிதி ஆண்டு முதல் இந்த உரிமையை மாநிலங்கள் கைவிட வேண்டிய முடிவு மாநில நிதி அமைச்சர்கள் மாநாட்டில் ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கம் இந்த மூன்று இலக்குகளுக்கும் 'எச்சைஸ்' (சுங்க) வரியை உயர்த்தி வசூலித்துக்கொள்ளுமாம்.

இந்த ஏற்பாட்டின் காரணமாக விலை உயராமல் குறையும் என்றும், மாநிலங்களுக்குப் பங்கு அதிகம் கிடைக்கும் என்றும் இப்போது நம்பப்படுகிறது.

விற்பனை வரியை வியாபாரிகள் கட்டாமல் ஏமாற்றி வருகிறார்களாம். மத்திய அரசிடம் வரி வசூலை ஒப்படைப்பது, அதைக் குறைக்குமாம்.

இந்த ஏற்பாட்டின் விளைவாக மத்திய அரசாங்கத்திற்கு ரூ. 8 கோடி அதிக வருமானம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பெருவாழ்விற்கான 17பொருள்கள் மீது விதிக்கப்படும் வரி இப்போது மாநிலங்களில் ஒரேமாதிரியாக இல்லாத காரணத்தினால் பெருவாழ்வுப் பொருள்கள் மீது ஒரே மாதிரியான வரி விதித்து, வரி கட்டாமல் ஏய்ப்பதைத் தடுக்கவும் மாநாடு ஆராய்ந்துள்ளது என்று தெரியவருகிறது.

தமிழகக் கிராமங்களை விட்டுக் கொடுத்த காமராசரின் தாராளம்!

ஆந்திர முதன்மந்திரி பாராட்டுகிறார்

படாஸ்கர் அறிக்கை பற்றிய விவாதம் ஆந்திர சட்டசபையில் நடைபெற்றபோது, பல உறுப்பினர்களும் தீர்ப்பை எதிர்த்துப் பேசியதுடன், ஆந்திரத்திற்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் கூறி, சர்க்கார் அந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டது தவறு என்றும் கண்டித்தனர்.

விவாதத்திற்குப் பதிலளித்த முதன்மந்திரி சஞ்சீவ ரெட்டியார், எல்லைத் தகராற்றின் வரலாற்றினை எடுத்துரைத்து, படாஸ்கர் தீர்ப்பு பற்றியும், அதை ஏற்றுக் கொண்டதையும் விளக்கினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:—

"படாஸ்கர் தீர்ப்பிற்குப் பிறகு, சில கிராமங்கள் பற்றி நாங்கள் மீண்டும் பரிசீலனை வேண்டுமெனக் கோரினோம். கிருஷ்ணகிரி தாலுகாவைச் சேர்ந்த சில கிராமங்களைப் பற்றி விவகாரத்தை மீண்டும் எழுப்ப வேண்டியிருக்கிறது என்று காமராசரிடம் கேட்டபோது அவர் சற்றும் தயக்கமின்றி அதற்குச் சம்மதித்தார். அந்த வகையில் காமராசர் நம்மைவிடப் பெருந்தன்மையாகவும், தாராளமாகவும் நடந்துகொண்டார். சூலூர்ப் பேட்டை தாலுகாவில் உள்ள சில தமிழக கிராமங்கள் பற்றி காமராசர் மீண்டும் பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டிருந்தால், அப்படி அவர் கேட்பது நியாயமாகத்தானே இருந்திருக்கும்? ஆனால் அவர் கேட்கவில்லை"

குடியேறிய நாட்டின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு பெறுவீர்

சாதி வேற்றுமைகளை மறந்து மூடத்தனத்தை ஒழித்து தமிழர்களனைவரும் ஒன்றுபடுவீர்

மகத்தான வரவேற்பு தந்த மலாயா, சிங்கப்பூர் தமிழர்களுக்கு பொன்னம்பலனர் அறிவுரை

மலாயா, சிங்கப்பூர் நாடுகளில், திரு. அ. பொன்னம்பலனர் அவர்களுக்கு, சென்ற இடங்களில் எல்லாம் மகத்தான வரவேற்புத் தரப்பட்டிருக்கிறது. பல நகரங்களிலும் உள்ள தமிழ்ப் பெரு மக்கள், அன்னாரை வரவேற்று உபசரித்து, வரவேற்பு இதழ்களும் பரிசுகளும் வழங்கி பெருமைப்படுத்தியுள்ளனர்.

ஆங்காங்கே நடைபெற்ற பல்வேறு பொது நிகழ்ச்சிகளிலும் திரு. பொன்னம்பலனர் அவர்கள் கலந்துகொண்டு, சமுதாய முன்னேற்றத்திற்கான அரிய கருத்துரைகளை வழங்கியுள்ளார்; ஆயிரக் கணக்கான தமிழ்ப்பெரு மக்கள்—ஆண்களும் பெண்களுமாகக் கூடி, பொன்னம்பலனர் அவர்களின் கருத்துரை கேட்டுப் பயன் பெற்றனர்.

பல நிகழ்ச்சிகளின் சாரம் ஏற்கனவே நமது இதழில் வெளி வந்தன; இப்போது, மேலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் விபரம் கீழே சுருக்கமாகத் தரப்படுகிறது :—

ஈப்போ :

18—8—57 காலை, ஈப்போவில் ஒரு மகத்தான வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சி, போரா நூல் நிலையத்தில், போரா மருத்துவர் சங்கச் சார்பில் நடைபெற்றது. தோழர் சு. ப. வெள்ளைச்சாமி தமிழ்த்தாய் வணக்கப் பாடல் பாடினார்; தோழர் கி. மு. நடராசன் அனைவரையும் வரவேற்றார்; தோழர் சா. சுப்பையா விழாவிற்குத் தலைமை ஏற்று, பொன்னம்பலனர் அவர்களின் பொது வாழ்வு பற்றிய சிறப்பு இயல்புகளை எடுத்துக் கூறினார்.

தோழர் பெ. வெங்கடாசலம் கைத்தறி ஆடை அணிவித்தார்; லெ. க. தங்கவேல் வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

திரு. பி. முத்துச்சாமி மருத்துவர் சங்கத்தின் சார்பிலும், திரு. ம. செ. முத்துமாறன் ஈப்போ தி. மு. கழக அனுதாபிகள் சார்பிலும் முறையே ரூ. 201, ரூ. 101 கொண்ட பண முடிப்புகள் அளித்தனர்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து திரு. பொன்னம்பலனர் அவர்கள் பேசுகையில், சமுதாய மறுமலர்ச்சியை வற்புறுத்தியும், மலைநாட்டில் வாழும் தமிழர்கள் மலைநாட்டின்மீது உண்மையான—உறுதியான பற்றுக்கொண்டு, உரிமைகளைப் பெற்று சிறப்புற வாழ வழிசெய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

தோழர் வீரய்யன் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

பத்துகாஜா :

அகில மலாயா தமிழர் சங்கப் பத்துகாஜா கிளையின் சார்பில், பொன்னம்பலனர் அவர்களுக்கு 18—8—57 அன்று மாலை ஒரு வரவேற்புத் தரப்பட்டது.

தோழர் எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் தோழர்கள் மு. அமிர்தசேகரன், மு. ஆறுமுகம் ஆகியோர் தமிழ்ப் பண் இசைத்தனர். தோழர் கே. நாராயணன் அனைவரையும் வரவேற்றார்.

தோழர் எஸ். கனகரெத்தினம் கிளையின் சார்பிலும், தோழர் எம். வீராசாமி தோலாங் தமிழர் சார்பிலும் மலர்மாலைகள் அணிவித்தனர்.

தோழர்கள் தே. சி. பால்ராஜ், சி. சுப்பையா, மு. சு. மணியம ஆகியோர் பொன்னம்பலனர் அவர்களின் பொதுவாழ்வுச் சிறப்பினை எடுத்துரைத்தனர்.

திரு. பொன்னம்பலனர் அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டு அரியதோர் சமூக சீர்திருத்தச் சொற்பொழிவாற்றினர். மலாயா சுதந்தரமடைவதில் தனக்குள்ள அளவில்லா மகிழ்ச்சியை வெளியிட்ட அவர், தமிழ் மக்கள் மலாயாவின் முன்னேற்றத்திற்கு எல்லா வகையாலும் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

தோழர் பொன்னுசாமி நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

பீடோர் :

23—8—57 மாலை 4 மணிக்கு பீடோர் சமுதாய மண்டபத்தில் பொன்னம்பலனர் அவர்களுக்கு தோழர் இராம வெங்கடாசலம் தலைமையின்கீழ் வரவேற்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தோழர் கோ. பக்கிரிசாமி தமிழ் வாழ்த்துப் பாடினார்; தோழர் ச. சுப்பையா வரவேற்புரை நல்கினார்.

தோழர்கள் இராம வெங்கடாசலம், சி. சுப்பையா, மு. சு. மணியம் ஆகியோர் பேசியபின், திரு. பொன்னம்பலனர் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகையில், அகில மலாயா தமிழர் சங்கம தமிழரின் குறைகளைப் போக்கவும், தமிழ் மொழி காக்கவும் பாடுபட்டுவருவதைப் பாராட்டி, தமிழர்கள் அச்சங்கத்தைப் பலப்படுத்திப் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுரை பகன்றார்கள்.

தோழர்கள் கோவிந்தசாமி, பெ. மா. அய்யாக்கண்ணு, கோ. பக்கிரிசாமி ஆகியோர் இடையிடையே சுயமரியாதை—சீர்திருத்தக் கருத்துக்களடங்கிய பாடல்களைப் பாடினர்.

தோழர் கலியபெருமாள் நன்றியுரைத்தார்.

தாப்பாரோடு :

24—8—57 மாலை 4 மணியளவில் அகில மலாயா தமிழர் சங்கம் தாப்பாரோடு கிளையின் ஆதரவில் திருவள்ளுவர் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சமுதாய மண்டபத்தில் நடைபெற்ற அந்த விழாவில், வந்திருந்தோரை தோழர் நா. லெட்சுமணன் வரவேற்றார். கம்பார் தமிழ்ப் பள்ளி ஆசிரியர் த. ஜோசப் தலைமை ஏற்று, குறள் அறிவு பரவவேண்டியதன் அவசியம் உணர்த்தினர்.

தோழர்கள் மு. சு. மணியம், மு. குணசேரம் ஆகியோர் பேசியபின், திரு பொன்னம்பலனர். அவர்கள், குறளின் மேன்மையையும், குறளைப் பெற்றுள்ள தமிழின் சிறப்பையும் தொன்மையையும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழரின் பண்பாட்டு வரலாற்றுச் சிறப்புகளையும் எடுத்துரைத்து, புகழ்பெற்ற தமிழினம் இன்று இழிநிலையில் வைக்கப்பட்டிருப்பதிலிருந்து விடுதலைபெற்று மீண்டும் ஓங்கு புகழோடு திகழ வழிகாண வேண்டியது தமிழர் ஒவ்வொருவரின் கடமை என்பதையும் வற்புறுத்தி அரிய கருத்துரை வழங்கினர்.

விழாவில், செல்விகள் கிருஷ்ணவேணி முத்து, சுந்தராம்பாள் ஆகியோர் நடனமாடி மகிழ்வித்தனர்.

கோலாக்கிள்ளான் :

25—8—57 மாலை 5-30 மணிக்கு, அகில மலாயா திராவிடர் கழகம் கோலாக்கிள்ளான் கிளையின் சார்பில் பொன்னம்பலனர் அவர்களுக்கு 'சீவியூ ஓட்டலில் ஒரு தேநீர் விருந்தும், வரவேற்பும், தரப்பட்டன.

மா. சு. மணியம அனைவரையும் வரவேற்றார்; ஆ. சுப்பையா கைத்தறி ஆடை அணிவித்தார்.

தோழர் கே. ஆர். இராமசாமி வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

தோழர்கள் ஆ. சுப்பையா, சு. தங்கவேலர், கா. ப. சாமி, மு. சு. மணியம் ஆகியோர் பொன்னம்பலனரின் அரிய தொண்டுகளை எடுத்துரைத்துப் பேசினர்.

திரு. பொன்னம்பலனர் அவர்கள் நன்றி நவின்று பேசுகையில், பல சமூக சீர்திருத்தக் கருத்துக்களை விளக்கினர்.

கோலாலம்பூர் :

7—9—57-ல், இங்கு, திரு. பொன்னம்பலனர் அவர்கள் தலைமையில் ஓர் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

கோலாலம்பூர் மத்திய மின்சார இலாகா தொழிலாளர் இல்ல வரிசையில், 99/7-ம் எண் இல்லத்தில், தோழர் கே. கிருஷ்ணசாமி அவர்களும் தோழியர் வள்ளியம்மையும், பொன்னம்பலனர் அவர்களின் தலைமையில், வாழ்க்கைத் துணைவர்களாயினர்.

தோழர்கள் எஸ். ஆறுமுகம், எஸ். மாரிமுத்து ஆகியோர் பேசியபின், தோழர் பொன்னம்பலனர் அவர்கள், சமூக சீர்திருத்தத்தின் அவசியத்தையும் நோக்கத்தையும் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

சிரம்பான் :

14—9—57 அன்று சிரம்பான் தமிழர் சங்கத்தின் சார்பில், தமிழகத்தின் தலைசிறந்த நடிகர் கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க ஓர் மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

நெகிரி செம்பிலான் மாகாணக் கவுன்சிலர் ஏ. எஸ். தாவூத் தலைமை வகித்து, கலைவாணரின் மறைவு தமிழ்க் கலையுலகுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்பதை விளக்கினர். அனுதாபம் தெரிவிக்க அனைவரும் மூன்று நிமிட நேரம் அமைதியாயிருந்தனர்.

அடுத்து திருவாளர்கள் அப்துல்ரகீம், எம். எம். பீர்முகம்மது ஆகியோர் பேசியபின், திரு. பொன்னம்பலனர் அவர்கள், கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் கலைத்துறைப் பணி எவ்வாறு சமூக சீர்திருத்தப் பணியாக விளங்கியது என்பதையும், கலைவாணரின் திறமைகளையும் விளக்கிக்கூறி, அன்னாரின் மறைவு ஈடுசெய்யவொண்ணாப் பேரிழப்பு என்று எடுத்துரைத்தார்கள்.

அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

அறிக்கை

கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் மறைவு குறித்து பொன்னம்பலனர் அவர்கள் மலாய நாட்டு இதழ்களுக்கு அறிக்கை ஒன்று விடுத்தார்கள்.

27—9—57 அன்று விடுத்த அந்த அறிக்கையில், 'கலைவாணரின் மறைவு தமிழ் மக்களுக்குத் தந்த துயரம் அளவிட முடியாதது' என்றும், 'அவரது நினைவு தமிழகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும்' என்றும், 'கலைவாணரின் அரியபணிகளும், வள்ளல்தன்மையும் பல கலைஞர்களும் பின்பற்றத் தக்கவை' என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

கோப்பிங் :

13—10—57 அன்று மாலை 5-மணிக்கு அகில மலாயா தமிழர் சங்க கோப்பிங் கிளை சார்பில்

(4-ம் பக்கம் பார்க்க)

தஞ்சை மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

மாவட்ட 3வது மாநாடு பற்றி முடிவு

20—10—57 ஞாயிறன்று வேதாரண்யம் கழகக் கட்டடத்தில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தஞ்சை மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாட்டை மார்ச் திங்களில் திருவாரூரில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராவார்.

தோழர்கள் சி. கிருஷ்ணமூர்த்தி (குடவாசல்), ப. நாராயணசாமி (மன்னார்குடி) ஆகியோர் மாநாட்டுச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர் மு. கருணாநிதி அவர்கள் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோழர்கள்— கு. அடைக்கலம் (பேராவூரணி), அ. நடராசன் (கொரடாச்சேரி) ஆகியோர் தொண்டர் படைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மற்றும், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், வலங்கைமான்-அரங்கண்ணல் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் கழக ஆக்க வேலைகள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கள்ளக்குறிச்சி வட்ட கழக தோழர்கள் மீது வழக்கு

அனைவரும் நிரபராதிகள் என விடுதலை

கள்ளக்குறிச்சி வட்டம் எடுத்து வாய்ந்தத்தில் கலவரம் செய்ததாக நம் கழகத் தோழர்கள் 25 பேர் மீது இவ்வாண்டு மே மாதம் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

காங்கிரஸ் தேர்தலில் தோற்றுவிட்டதால் காங்கிரஸ்காரர்களின் தூண்டுதலின் பேரிலேயே இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

14 பேர்கள் சிறையிலடைக்கப்பட்டு மறுநாள் ஜாமீனில் வெளி வந்தனர். வழக்கு, உளுந்தூர்ப்பேட்டை முதல் வகுப்பு நீதிபதி முன்னிலையில் நடைபெற்றது. சர்க்கார் தரப்பில் பல சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

பல ஒத்திவைப்புகளுக்குப்பின், சாட்சிகளின் காரணம் சரியில்லை என்று கூறி, குற்றஞ்சாட்டப்பட்ட தோழர்களை நிரபராதிகள் என்று நீதிபதி 31—10—57 அன்று வழக்கை தள்ளுபடி செய்தார். கழகத் தோழர்கள் சார்பில் கள்ளக்குறிச்சி வழக்கறிஞர் டி. ஏ. தாத்தாச்சாரியார் வாதாடினார்.

வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்களின் விவரம் பின்வருமாறு :—

அருணாசலம், சின்னத்தம்பி, எஸ். பெரியசாமி, பெ. ரெங்கசாமி, பெ. நடேசன், எம். வில்லுமணி, அ. பொன்னுசாமி, ஆர். இராமசாமி, ரெ. நாராயணசாமி, எம். பிச்சமுத்துமூப்பர், ராமசாமி கோனார், சின்னக்கோனார், சின்னதம்பிக்கவுண்டர், மொட்டையபடையாச்சி, ஆறுமுகப்படையாச்சி, ரங்கசாமிக்கவுண்டர், இராமசாமிமூப்பர், பிச்சக்காரமூப்பர், பெருமாள்கவுண்டர், சின்னசாமி, சுப்புசெட்டி, செ. முத்துசாமி படையாச்சி, அ. முத்துசாமி, பாரஸ்வாட்சர் முத்துரெட்டி, ராஜி.

பெருமழையால் குழந்தைகளையும் வீட்டையும் இழந்த நெசவாளர்

திருக்கழுக்குன்றம் கழகத் தோழர்கள் நிதி உதவினர்

திருக்கழுக்குன்றம், நவ. 18—

மழையின் கொடுமையால் வீடிழந்து, பெற்ற மக்களை இழந்து தவித்த ஏழைகளுக்கு, திருக்கழுக்குன்றம் தி. மு. கழகத் தோழர்கள் தக்க உதவியளித்து சீரிய பணியாற்றியிருக்கின்றனர்.

கடந்த 7—11—57-ல் பெய்த பெருமழையின் விளைவாக திருக்கழுக்குன்றம், ருத்தரகோட்டி என்னும் பகுதியில் ஏழை நெசவாளி ஒருவருடைய வீட்டின் சுவர் இடிந்து அடுத்துள்ள நெசவாளித் தோழர் ஒருவருடைய வீட்டின் மீது விழுந்தது; இதன் விளைவாக அந்த வீட்டினுள் படுத்துறங்கிக் கொண்டிருந்த இரு குழந்தைகள் நசுங்கி மாண்டன. மேற்படி இரு வீட்டுச் சொந்தக்காரர்களும் பரம ஏழைகள்.

செய்தியறிந்த தி. மு. கழகத் தோழர்களும், அனுதாபிகளும சேர்ந்து நிதி வசூலித்தது; வீட்டையும், இரு குழந்தைகளையும் இழந்த தட்சிணாமூர்த்தி என்னும அந்த ஏழை நெசவாளிக்கு ரூ. 50-ம், வீட்டை இழந்த மற்றொருவரான சின்னக்கண்ணு என்பவருக்கு ரூ. 15-ம் கொடுத்து உதவினார்கள்.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக துணைச்செயலாளர் வகாப் தலைமையில் திருக்கழுக்குன்றம் தி. மு. க. செயலாளர் டி. ஏ. சண்முகம், திரு. வி. க. மன்றச் செயலாளர் ஜி. மாதவன், ஜெயராமன், புருஷோத்தமன், எம். எஸ். ஏ. வகாப், நித்தியானந்தம், குருசாமி ஆகியோரும் மற்றும் சில அனுதாபிகளும் நேரில் பாதிக்கப்பட்ட அந்த இருவரின் வீடுகளுக்கும் சென்று மேற்படி தொகையைக் கொடுத்தனர்.

கழகத்தவரின் உதவிக்கு அவ்விரு நெசவாளிகளும் மிக்க நன்றி தெரிவித்தனர். (ந-கி.)

உண்மையை நோக்கி செல்கிறோம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சரி—அவருக்காக நாங்கள் இந்த முடிவை எடுக்கவில்லை. நெடுக காலத்துக்குப்பிறகு, சட்டசபை நடவடிக்கைப் புத்தகத்தை யாரேனும் புரட்டிப் பார்ப்பார்களே யானால், 'பெரியாரை அடக்க, ஒடுக்கவேண்டும் என்று சட்டம் கொண்டு வரப்பட்ட போது, அதை எதிர்த்துப்பேச அப்பொழுது வேறு நாதியில்லை; ஒதுக்கப்பட்டவனானாலும், விரட்டப்பட்டவனானாலும், வெட்கத்துக்கும் வேதனைக்கும் ஆளான அண்ணாத்துரைதான் இருந்தார்'—என்பதைப் படிப்பார்கள்.

"சட்ட சபை நிகழ்ச்சிகளெல்லாம், பெரும்பாலும் தமிழ்நாட்டு வரலாற்றுக்குப் பயன்படும் அத்தியாயங்களாகும்.

"ஆம்—இல்லை என்பது,எளிது. பெரியார்மீது நடவடிக்கை எடுப்பதை ஆதரிப்போமானால் காங்கிரஸ்காரர்கள் சந்தோஷப்படுவார்கள்; நம்மீது காங்கிரஸ்காரர்களுக்குள்ள கோபம் குறையும்; திராவிடர் கழகக்காரர்களுக்கு கோபம் அதிகரிக்கும்; 'நடவடிக்கை எடுக்கக் கூடாது' என்று நாம்பேசினால் திராவிடர் கழகத்தவரும் உள்ளூர சந்தோஷப்படுவார்கள்; காங்கிரஸ்காரர்களுக்கு கோபம் அதிகரிக்கும்—இப்படி, வரவு—செலவுக் கணக்குப் பார்த்துக் கொள்வதற்கு அல்ல நாம் எடுக்கும் முடிவு.

"தி. மு. கழகம், இந்த இரண்டு முனைகளின் பின்னேயும் ஓடி, உண்மை எந்த முனைநோக்கி ஓடுகிறதோ, அந்த முனை நோக்கியே அதனைத் தேடிச் செல்கிறது.

"கோலார் தங்கச் சுரங்கத்தில், நேரே கீழே இறங்கினால் நாம் தங்கத்தைப் பார்க்கமுடியாது; பாறை எந்தப் பகுதியிலிருக்கிறதோ, அந்தப் பகுதியில்—தங்க ரேகை எங்கே ஓடுகிறதோ அங்கு வெட்டிய பிறகுதான் தங்கத்தைக் காண முடியும். உண்மையும் அப்படித்தான். தங்க ரேகை நேராக இல்லாமல் வளைந்து வளைந்துதான் செல்லும்; அப்படித்தான் உண்மையும் வளைந்து வளைந்து செல்லும். அது ஓடும் பக்கத்தைக் கண்டு பிடிக்கும் திறனும் மனப்போக்கும் வேண்டும். உண்மை என்னும் அந்தத் தங்க ரேகை நோக்கித்தான் தி. மு. கழகம் செல்கிறது.

"'ஆம்—இல்லை' என்பதற்கு இடையே, நடுவே இருப்பது தான் ஜனநாயகம்.

தி. மு. கழகம் தன் மனதுக்குச் சரி என்று படுவதை திட்ட வட்டமாகத் துணிவுடன், அச்சம்—தயை—தாட்சண்யமின்றி, ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லி அதற்கெனப் பாடுபடுகிறது.

"ஒன்று மட்டும் சொல்லிக் கொள்வேன்—எங்கள் கட்சியின் முடிவு, என் சுயநலத்துக்காகஎடுக்கப்பட்ட முடிவு அல்ல.

"ஆட்சியாளர் எந்த அடக்கு முறைச் சட்டத்தைப் போட்டாலும், அது, எதேச்சாதிகார கோள்கைக்குக் கொண்டு செல்லும்; அதை வைத்துக் கொண்டுதான் ஆராய்ந்தோம். ஒருமுறை இரண்டு முறையல்ல—பல நாள், பல இரவுகள் கூடிப் பேசினோம்; அதன் பிறகுதான் நம் கழகச் சார்பில் எடுத்துச் சொன்னோம் நான் சொன்னேன்—'சட்டத்தைக் கைவிட்டுவிட வேண்டும்'—என்று!

"பெரியாரை 'பைத்தியம்' என்றெல்லாம் பேசிய அமைச்சர் இறுதியில் என்ன பேசினர்? முதலில் வீரதீரமாகப் பேசியவர்—அரசியல் கண்ணோல் பேசியவர்—ஈரசாரமாகப் பேசியவர்—நான் பேசிய பிறகு என்ன சொன்னார்!

"இதுவரை பெரியாரைப்பற்றி சட்டசபையில் எந்தக் காங்கிரஸ்காரரும் பாராட்டாத அளவுக்கு பேசினார். ஆரம்பத்தில் துடுக்குத்தனமாகப் பேசிய அவர், மிக மரியாதையாக, 'பெரியார் தமிழ் நாட்டின் தந்தை; எல்லா அரசியல் கட்சிகளுக்குமே தந்தை போன்றவர்; தந்தையாகிய பெரியார் எங்களுக்கெல்லாம் வழி காட்டவேண்டும்; எங்களை ஆசீர்வதிக்கவேண்டும் என்று அடி பணிந்து வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்; காங்கிரஸ் கட்சியும் சாதிகளை ஒழிக்கவே கருதுகிறது; பெரியாரவர்கள் அருள் கூர்ந்து சாதி ஒழிக்கும் வேலையில் நாங்கள் ஈடுபட ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்' என்றல்லவா பேசினார்?

"நான் பெரியாரவர்களுடன் 15—20 ஆண்டுகள் இருந்து பாடு பட்டேன். நான் அவரை கார்ல் மார்க்ஸ் என்றேன்; லெனினுடன் ஒப்பிட்டுக் காட்டினேன்; சாக்ரட்டீசைப் போன்றவர் என்று உவமை காட்டி விளக்கினேன். நான் சொன்ன அதைத்தானே இன்று மிச்சமிருக்கும் தோழர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்? அரைத்த மாவையேதானே இன்றைக்கு அரைத்துக்கொண்டிருக்கிறார்கள்? பெரியாருடனிருந்து நான் செய்த 15 ஆண்டு தொண்டுகளைவிட சுப்பிரமணியம் வாயால், அடிபணிந்து பேசச் செய்ததுதான் நான் பெரியாருக்குச் செய்த மிக முக்கிய தொண்டு என்று கருதுகிறேன்.

"பதினைந்து பேர்தான் சென்றார்கள், பரிதாபத்துக்குரியவர்கள்—என்று பழித்துப் பேசினார்கள்; அவர்களுடைய பகையையும் தாங்கிக்கொண்டுதான், பஞ்சை, பராரிகளைப்போல நாங்கள் 15 பேர் சென்றோம், சட்டசபைக்கு!

"எந்தப் பெரியாரை மன அரிப்புடன், 'பைத்தியம்' என்று சொன்னாரோ, பிறகு அதே பெரியாரை—அந்த ஆணவம் அடங்கி, 'அடிபணிகிறேன்' என்று எங்கள் எதிரிலேயே—எங்கள் பேச்சுக்குப் பிறகு சொன்னார். இதுதான் பெரியாருக்கு எங்களுடைய காணிக்கை! சிலர், பெரியாரவர்களுக்குத் தீப்பெட்டியும் பெட்ரோலும் காணிக்கையாகக் கொடுத்தார்களாம்!

"'இட்டார்க்கு இட்டபலன்' என்பதுபோல, தகுதிக்குத் தக்கபடியே பலன் கிடைக்கும். நல்ல மனம் படைத்த நாம், காங்கிரஸ் என்னும் தராசில் தங்கத்தை வைத்து நிறுத்து காணிக்கையாகத் தருகிறோம்.

"இதைக்கூட, 'நயவஞ்சகம்' என்று சொல்லுவீர்களேயானால், நான் கேட்கிறேன்—எப்பொழுது அண்ணாதுரையை வீழ்த்தப்போகிறீர்கள்? வீழ்த்தாமல் விட்டுவிட்டால், இது—இந்த நயவஞ்சகம் வளர்ந்து கொண்டே போகுமே! நெஞ்சில் கை வைத்துப் பேசவேண்டும். இதைக்கூட 'நயவஞ்சகம்' என்று சொன்னால், நீங்கள் மனித சுபாவத்தையே ஆராயத் தவறிவிட்டீர்கள் என்று தான் சொல்லுவேன்.

"முதலில் எவ்வளவு கோபாவேசத்தோடு பேசினாரோ அதையெல்லாம் அடக்கிக்கொண்டு, 'சாதியை ஒழிக்க அண்ணாதுரை திட்டம் தீட்டிக் கொடுக்கட்டும்; நாங்கள் நிறைவேற்றி வைக்கிறோம்' என்றார் நிதியமைச்சர் சுப்பிரமணியம்; நிதியமைச்சர் அப்படிச் சொல்லக்கூடியவரா? சொல்லக்கூடிய அளவு பழக்கப் பட்டவரல்ல! அவர் என்னைப் பார்த்து அப்படிக் கேட்கக்கூடிய அளவுக்கு 100 பேரா இருக்கிறோம், என் பின்னால்? 15 பேருடன் இருக்கும் அண்ணாதுரை திட்டம் தீட்டிக் கொடுத்து உதவ வேண்டும் என்று அவர் கேட்பானேன்? திட்டம் என்னைக் கேட்டு, நான் தீட்டித் தருவது பிறகு இருக்கட்டும்; அப்படி அவர் கேட்டதன் கருப்பொருள் என்ன? பெரியாரும, அவரது நண்பர்களும் தவறு செய்து விட்டார்கள். முறைதான் தவறு. பெரியாரின் நோக்கம் சரிதான் என்று நான் பேசியதும், மனம் மாறிய காங்கிரசுக்காரர்களும், அமைச்சரும் 'திட்டம் கொடு' என்று கேட்கிறார்கள் என்றால், பெரியார் மட்டும் எங்களை ஆதரித்திருந்தால்—நாங்கள் 50 பேராக இருந்திருந்தால்—அந்தச் சட்டம் நிச்சயம் வராது.

சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, சாமான்யனான என்னைப் பார்த்து—மன்னிப்புக் கேட்கும் முறையில், இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராத நிலையை உண்டாக்குமாறு கேட்டுக்கொண்டார், அமைச்சர்! நாம், காங்கிரசுக்காரர்களைப்போல பலம பெற்றவர்களல்ல; அவர்களைப்போல அரசியல் அனுபவமும் நமக்குக் கிடையாது.

"வலிவற்ற முறையிலே 15 பேர்தான் இருக்கிறோம். இந்த நிலையிலேயே, நம்மைப் பார்த்து அமைச்சர் இவ்வாறு கேட்கிறார் என்றால், பெரியார் மட்டும் நம் பக்கம ஒரு புன்னகை காட்டியிருந்தால்—ஒரு துளி ஆதரவு தந்திருந்தால் — கொஞ்சம் தலை அசைத்திருந்தால்—வருமா, சட்டம்?

(பேச்சு முடியவில்லை.)

கழகக் கூட்டங்கள்

★

சரக்கப்பிள்ளையூர்

(சேலம் மாவட்டம்)

22—11—57 மாலை 6½மணிக்கு

தலைவர் : சி. இராசு

பேசுவோர் :

க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஈ. ஆர். கிருஷ்ணன்
அ. முத்து
உ. ச. வள்ளிநாயகம்

★

அம்மையப்பன்

(தஞ்சை மாவட்டம்)

கடைத் தெருவிற்கருகில்

22—11—57 மாலை 5½மணிக்கு

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

இசை : நாகூர்-அனீபா

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

நவம்பர்

21 : மாலை - வட்டத்தூர்
இரவு - புவனகிரி
22 : மாலை - அம்மையப்பன்
23 : காலை - முத்துப்பேட்டை
மாலை - பாப்பாநாடு, ஒனுதி
இரவு - பட்டுக்கோட்டை
24 : காலை - தஞ்சாவூர்
மாலை - திருச்சேரை
இரவு - குடந்தை
25 : மாலை - செந்தாரைப் பட்டி
இரவு - ஆத்தூர்

நாகையில் நாவலர் படிப்பகத் துவக்க விழா

22—11—57 மாலை 6 மணிக்கு நாகை, புதுத் தெருவில் தோழர் எஸ். யூசுப் மரைக்காயர் எம். சி. அவர்கள் தலைமையில், தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் நாவலர் படிப்பகத்தைத் துவக்கி வைப்பார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

21—11—57 இரவு 8 மணிக்கு சென்னை 47-வது வட்ட தி. மு. கழகக் கிளை சார்பில் எரிக்கரை திரு. வி. க. மன்றத்தில் தோழர் சடகோபன் தலைமையில் 'நாம் கோரும் திராவிடம்' என்னும் பொருள் குறித்துச் சொற்பயிற்சி நடைபெறும்.

தமிழர்களுக்கு பொன்னம்பலனர் அறிவுரை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹோஹோ சினிமா மண்டபத்தில் வள்ளுவர் விழாவொன்று சிறப்பாக நடைபெற்றது; திரு. சி. சுப்பையா தலைமை வகித்தார்.

தோழர்கள் அமிர்தகணேசன், கோ. பா. சாமி ஆகியோர் இன்னிசை வழங்கினர்.

செல்விகள் ரோசலின் அந்தோனி, ஜெபமணி, வெள்ளையப்பன், சுசிலா நாயர் ஆகியோர் நடனமாடி மகிழ்வித்தனர்.

டி. பி. இராசு கிராமணியார் அவர்கள் பொன்னம்பலனாருக்கு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார்.

தோழர்கள் குணசேகரன், மு. சு. மணியம் ஆகியோர் பேசியதும், திரு. பொன்னம்பலனார் அவர்கள், தமிழரின் வாழ்வுக்கு இலக்கணம் வகுத்துத் தந்தவர் வள்ளுவர் என்றும், அந்த வள்ளுவரின் குறள்நெறி பரவ—சீர்திருத்தக் கருத்துக்கள் வளர—சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிய எல்லாத் தமிழர்களும் பாடுபட வேண்டும்என்றுகேட்டுக்கொண்டு அரியதோர் கருத்துரையாற்றினார்.

தோழர் முனியாண்டியின் நன்றியுரையோடு விழா இனிது முடிவுற்றது.

கூலிம் :

25—10—57 மாலை 3-30 மணி அளவில், கூலிம் நகர் ஹொக்கியாங் கொங்சார் மண்டபத்தில், திரு. பொன்னம்பலனார் அவர்களுக்கு நகர தமிழர் சார்பில் ஓர் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ரெ. தருமலிங்கம் தலைமை ஏற்று, பொன்னம்பலனார் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவுவாதி என்றும், அன்னாரின் பகுத்தறிவுப் பிரச்சாரம் மலாயா தமிழ் மக்களுக்கு நிரம்பப் பயன்படவேண்டும் என்றும் விளக்கம் தந்தார்.

அடுத்து, தோழர் ம. ஒளியழகன் நிகழ்த்திய வரவேற்புரையில், பொன்னம்பலனார் அவர்கள் திராவிட மக்களுக்குச் செய்திருக்கும் தொண்டு சிறப்பானது என்றும். சொல்லடி கல்லடிகளுக்குக் கலங்காமல் தன்மான உணர்வையும், இன எழுச்சியையும் ஊட்டியவர்களுள் ஒருவர் என்றும், அவர் பன்னெடுங்காலம் வாழ்ந்து மேலும் திராவிட மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

பின்னர், தோழர்கள் அ. பாபு. அழகுசெகநாதன், அ. கோவிந்தசாமி ஆகியோர் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அளித்து, வரவேற்ப இதழும் வாசித்துத் தந்து, பொன்னம்பலனார் அவர்களின் வருகையினால் தங்களுக்குள்ள மகிழ்ச்சியையும், அவரது கருத்துக்களைக் கேட்டு, மலாயா தமிழ் மக்கள் பயன் பெறுவதில் தங்களுக்குள்ள ஆர்வத்தையும் எடுத்துரைத்தனர்.

பின்னர், வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் பொன்னம்பலனார் அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"குடியேறிய இந்த நாட்டிலும்கூட தமிழர்கள் இன்னும் சாதி வேற்றுமைகளைக் கைவிட்டபாடில்லை; ஆண்டவன் சந்நிதானத்தில்கூட, 'தேங்காய், பழம் செட்டியாருக்குத்தான் முதலில் தரவேண்டும்' என்பன போன்ற உயர்வு-தாழ்வு மனப்பான்மையைக் காணுகிறோம். இந்த உயர்ந்த சாதி-தாழ்ந்த சாதி என்ற பாகுபாட்டு எண்ணங்கள் எல்லாம் மாளவேண்டும்; 'எல்லோரும் ஓர் குலம்' என்ற எண்ணம் பிறக்கவேண்டும்; மூடப் பழக்கங்கள் எல்லாம் ஒழிய வேண்டும்; நல்ல கல்வியறிவும், பகுத்தறிவு நெறியும் வளர வேண்டும்.

"ஒழுக்கமும் அறிவும், நலனும் மிகுந்த வாழ்வுபெற—தமிழர் முன்னேற அதுதான் வழி.

"ஆண்டவன் பெயரால் மோட்சத்தையும், நரகத்தையும்காட்டி, ஆசையையும் அச்சத்தையும் ஊட்டி, மக்களை அறியாமையில் ஆழ்த்தும் மடமை அகலவேண்டும்.

"தாழ்ந்தவர்கள் உயர்ந்து விட்டால், ஏதோ தங்களுக்கிருந்த ஏகபோக அரசுரிமை போய்விடுவதுபோல சிலர் கருதும் எண்ணம் தொலைய வேண்டும்.

"உயர்வும் தாழ்வும் சாதியால் இல்லை என்பதை அனைவரும் அறிதல் வேண்டும்."

தொடர்ந்து பேசிய பொன்னம்பலனார் அவர்கள், திராவிடர் சமுதாயத்தின் இன்றையப் பிரச்சினைகளை எடுத்துரைத்து, அவற்றிற்கான பரிகாரங்களையும் விளக்கினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி நவிலப்பட்டு விழா இனிது முடிவுற்றது.

பினங்கு :

27—10—57-ம் நாளன்று பினங்கு தமிழ் மக்கள், பொன்னம்பலனார் அவர்களுக்கு மிக உற்சாகமானதோர் வரவேற்பளித்துச் சிறப்பித்தனர்.

விழா அன்றுமாலை 4-30 மணி அளவில், பினங்கு செந்தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில், கொடைவள்ளல் நா. ரெங்கசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தோழர் வி. எஸ். மணியம் அனைவரையும் வரவேற்றார்.

தலைவர் அவர்கள், தனது முன்னுரையில், பொன்னம்பலனார் அவர்களின் பொதுத் தொண்டுச் சிறப்பினையும், கடந்த 17 ஆண்டுகளாக அன்னாருடன் தமக்குள்ள தொடர்புபற்றியும் எடுத்துரைத்து, பினங்கு மக்களுக்கு பொன்னம்பலனார் அவர்கள் அரிய கருத்துரைகளை வழங்கக் கேட்டுக் கொண்டார்கள்.

தோழர் எம். ஜமால்தீன் அவர்கள் தலைவருக்கும், பொன்னம்பலனாருக்கும் கைத்தறி ஆடைகள் அளித்தார்கள்.

இளங்கோ மன்றத்தின் சார்பில் திரு. பி. சி. இராமையா அவர்கள் 'பொதுநலக் காவலர்' என்ற சிறப்புப் பெயர் பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கம் ஒன்றை பொன்னம்பலனாருக்கு அளித்தார்கள்.

ஆசிரியர் கருப்பையா அவர்களும், மற்ற பிறரும், பல மன்றங்கள் சார்பில் மலர்மாலைகள் அணிவித்தனர்.

நன்றி தெரிவித்துப் பேசிய பொன்னம்பலனார் அவர்கள் அரியதோர் நல்லுரை வழங்கினார்கள். கூடியிருந்த பல்லாயிரம் பேரும் சீர்திருத்தக் கருத்து மழையில் நனைந்து பயனடைந்தனர்.

இறுதியாக இரா. நாராயணன் நன்றி நவில, விழா இனிது முடிவுற்றது.

விருந்து

அன்று இரவு 7-30 மணிக்கு, இளங்கோ மன்றத்தினர், எஸ். அருளாந்து தலைமையில் பொன்னம்பலனாருக்கு 'போஸ்டன் கபே'யில் சிறந்த தேநீர் விருந்து ஒன்று அளித்தனர்.

பனமரத்துப்பட்டியில் 'அண்ணா' நாடகம்

22—11—57இரவு 10 மணிக்கு பனமரத்துப்பட்டியில், கலைவாணர் நாடக மன்றத்தாரால், தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் தலைமையில் 'அண்ணா' என்னும் நாடகம் நடத்தப்பெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.